# மாலை முரசு

பக்கங்கள் 19+ 03

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 24 வெள்ளிக்கிழமை 10.10.2025 | அதிர்வு 71


## காணாமல்போன இரு சிறுவர்களும் சடலங்களாக மீட்பு!



கண்டி , தென்னகும்புர பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு சிறுவர்கள் காணாமல் போயிருந்த

04▶


‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




### அநுர அரசாங்கத்தில் முதல் தடவையாக

# அமைச்சரவையில் அதிரடி மாற்றம்!

## பிமலிடமிருந்து துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சுகள் பறிப்பு

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அமைச்சரவையில் இன்று முதல் முறையாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

2026 வரவு - செலவுத் திட்டத்துடன் இணைந்ததாக அரசாங்கத்தின் அபிவிருத்தி இலக்குகளைத் துரிதமாகவும் செயற்றிறனுடனும் முன்னெடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை மாற்றத்தின் கீழ் நியமிக்கப்பட்ட மூன்று அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் மற்றும் பத்து பிரதி அமைச்சர்கள் இன்று காலை ஜனாதிபதி அலுவலகத்தில்

02▶









# அமைச்சரவையில் அதிரடி மாற்றம்!

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்தனர்.

அதன்படி, இன்று பதவியேற்ற புதிய அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளனர்.

✯ பிமல் ரத்நாயக்க – போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர்

✯ அநுர கருணாதிலக – துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர்

✯ வைத்தியர் எச்.எம். சுசில் ரணசிங்க – வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்

✯ கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ – நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர்

✯ டி.பி. சரத் – வீடமைப்பு, நிர்மாணத் துறை மற்றும் நீர் வழங்கல் பிரதி அமைச்சர்

✯ எம்.எம். மொஹம்மட் முனீர் – சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர்

✯ எரங்க குணசேகர – நகர அபிவிருத்தி பிரதி அமைச்சர்

✯ வைத்தியர் முதித ஹன்சக விஜயமுனி – சுகாதார பிரதி அமைச்சர்

✯ அரவிந்த செனரத் விதாரண – காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர்

✯ எச்.எம். தினிது சமன் குமார – இளைஞர் விவகார பிரதி அமைச்சர்

✯ யூ.டீ. நிஷாந்த ஜயவீர – பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர்

✯ கலாநிதி கௌசல்யா ஆரியரத்ன – வெகுஜன ஊடக பிரதி அமைச்சர்

✯ எம்.ஐ.எம். அர்கம் – வலுசக்தி பிரதி அமைச்சர்

















# தமிழரசு, மு.காவைத் தடை செய்ய வரவிருந்த பிரேரணை முறியடிப்பு

## சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு



இன மற்றும் மதப் பெயர்கள், அடையாளங்களைக் கொண்ட கட்சிகளைத் தடை செய்யுமாறு கோரி நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க கொண்டு வரவிருந்த தனிநபர் பிரேரணை இன்று நாடாளுமன்றத்தில் பெரும் வாதத்தைத் ஏற்படுத்தியது.

அந்த முயற்சி தங்களின் கடும் எதிர்ப்பால் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

"இலங்கைத் தமிழரசுக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்ற பெயர்களை வைத்து இந்தக் கட்சிகள் இலங்கையில் பதிவில் இருக்கக்கூடாது என்று முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க பிரேரணை ஒன்றை இன்று கொண்டு வந்திருந்தார்.

இந்தப் பிரேரணைக்கு எதிராக இன்று என்னால் நாடாளுமன்றத்தில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு கடுமையான விவாதங்களுக்கு மத்தியில் அந்தப் பிரேரணை முயற்சி முறியடிக்கப்பட்டது.

இதற்கு எமக்குப் பல கட்சிகளின் ஆதரவு இன்று கிடைக்கப் பெற்றது.

2009 ஆண்டளவில் இதே போன்ற காரணத்தைக் காட்டி இலங்கைத் தமிழரசுக் கட்சியைத் தடை செய்ய வேண்டும் என்ற வழக்கு வைக்கப்பட்டது. அதனை எதிர்த்து எமது கட்சியின் மறைந்த முன்னாள் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜாவினால் இந்த விடயம் கையாளப்பட்டு, இதற்கான வழக்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் அதனை எதிர்த்து வாதிட்டு வெற்றிகரமாக நீதிமன்றத்தில் அந்த முயற்சியை முறியடித்தார்."" – என்று இன்று இந்த விவாதத்தின் பின்னர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

இன்று நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவுக்குப் பதிலளித்த சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன,

"இன மற்றும் மத அடையாளங்களைக் கொண்ட அரசியல் கட்சிகளைத் தடை செய்வதற்கான சட்டத்தை இயற்றுவதற்கான நடவடிக்கையைத் தடை செய்து நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவும் அதைத் திரும்பப் பெற கோரிக்கை விடுத்துள்ளதால், அது வாபஸ் பெறப்பட்டது." – என்று கூறினார்.

இந்தப் பிரேரணைக்குப் பின்னால் உள்ள தனது ஒரே நோக்கம் நாட்டில் இன மற்றும் மத நல்லிணக்கத்தை உறுதி செய்வதாகும் என்று ரவி கருணாநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

சிறுபான்மை சமூகங்களுக்கு நீதி கிடைக்கும் வரை அத்தகைய பிரேரணை அல்லது சட்டத்தைச் செயற்படுத்தக்கூடாது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டார்.

# யாழ். தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக பாலித நியமனம்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக பாலித செனவிரட்ன கடமைகளைப் பொறுப்பேற்றார்.

யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய பி.எம்.சி.ஜே.பி. பளிகேன இடமாற்றம் செய்யப்பட்ட நிலையில் யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பதவி வெற்றிடமாகக் காணப்பட்டது.

இந்நிலையில், சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய பாலித செனவிரட்ன யாழ். தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

# தமிழ் மக்களுக்கு ஒருபோதும் துரோகம் இழைக்கமாட்டோம்!

## அநுர அரசு உறுதி

"தேசிய மக்கள் சக்தி ஆட்சியின் கீழ் நிச்சயம் மாற்றம் வரும் என்று தமிழ் மக்கள் உறுதியாக நம்புகின்றனர். அந்த நம்பிக்கைக்கு ஒருபோதும் துரோகம் இழைக்கமாட்டோம்."

– இவ்வாறு கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.



அவர் மேலும் உரையாற்றுகையில், "இந்த நாட்டில் கடந்த 76 வருடகால அரசியலானது மேட்டுக்குடிகள், தன வந்தர்களுக்கு மட்டுமே சொந்தமான அரசியலாக இருந்துவந்தது. இவர்களின் தாளத்துக்கேற்பவே அரசியல் வாதிகள் ஆட்டம் போட்டனர், ஆட்டுவிக்கப்பட்டனர். இந்நிலைமைய நாம் மாற்றியமைத்துள்ளோம்.

மேட்டுக்குடிகள் மற்றும் உயர் வர்க்கம் வசமிருந்த அரசியல் சாதாரண மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

எனவே, மக்களை மதிக்கின்ற, மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுகின்ற, உறுதிமொழிகளுக்கு செயல் வடிவம் கொடுக்கின்ற அரசாங்கமாகவே தேசிய மக்கள் சக்தி திகழ்கின்றது. ஆகவே, இந்த அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு மக்கள் முன்வரமாட்டார்கள். மாறாக அரசாங்கத்தின் பின்னால் அணிதிரண்டு அதன் பயணத்தை வலுப்படுத்தி வருகின்றனர்.

இற்றைக்கு ஒரு வருடத்துக்கு முன்னர் இந்த நாடு எந்நிலையில் இருந்தது. பல சவால்களுக்கு மத்தியில் நாட்டை மீட்டுள்ளோம். பொருளாதாரத்தை வளப்படுத்தி வருகின்றோம். வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்த தமிழர்கள் சுதந்திரமாக நாடு திரும்புவதற்குரிய சூழ்நிலை நிலவுகின்றது.

இனவாத மற்றும் மதவாத அரசியலுக்கும் முடிவுகட்டப்பட்டுள்ளது. எனவே, கடந்த ஒரு வருடத்தில் நாம் கடந்து வந்த பாதை மகிழ்ச்சியளிக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சர்வதேச விளையாட்டு மைதானம் கூட நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. படையினர் வசமுள்ள காணிகள் விடுவிக்கப்பட்டு வருகின்றன. வடக்கு மக்கள் மத்தியில் நம்பிக்கை கட்டியெழுப்பட்டுள்ளது. அங்குள்ள மக்களின் வாழ்க்கை மேம்பட்டு வருகின்றது."

– என்றார்.

# யானை தாக்கி இருவர் பரிதாபப் பலி!

வெவ்வேறு இடங்களில் காட்டு யானைகள் தாக்கி இருவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலனறுவை, பக்கமுன, பட்டுஹேன கிராமத்துக்குள் நேற்று நுழைந்த காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக் காகி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள் ளார்.

உயிரிழந்தவர் பக்கமுன, பட்டுஹேன கிராத்தைச் சேர்ந்த 62 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தந்தை ஆவார்.

காட்டு யானை ஒன்று பட்டுஹேன கிராமத்துக்குள் நுழைந்து வீடுகள் மற்றும் பயிர்களைச் சேதப்படுத்திய நிலையில்



மேற்படி குடும்பஸ்தரையும் தாக்கியுள்ளது என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

தாக்குதலுக்குள்ளான அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, அம்பாந்தோட்டையில் கிரிந்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒருகெம்முல்ல பிரதேசத்தில் நேற்று காட்டு யானை தாக்கி விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் இரத்தினபுரி – எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்தவர் ஆவார்.

இவர் கிரிந்த – ஒருகெம்முல்ல பிரதேசத்தில் அமைந்துள்ள தனது தோட்டத்தில் உள்ள பயிர்களை வன விலங்குகளிடமிருந்து பாதுகாப்பதற்காகத் தோட்டத்தில் தங்கியிருந்த போது காட்டு யானை தாக்கி உயிரிழந்துள்ளார்.

## காணாமல்போன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் அவர்கள் இருவரின் சடலங்கள் இன்று வெள்ளிக்கிழமை மகாவலி கங்கையில் மிதந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன என்று கண்டி பொலிஸார் தெரிவித்தனர்.

தரம் 8 மற்றும் தரம் 9 இல் கல்வி கற்கும் 13 மற்றும் 14 வயதுடைய சிறுவர்கள் இருவர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை வீட்டிலிருந்து வெளியே சென்றுள்ள நிலையில் மீண்டும் வீடு திரும்பவில்லை என்று கண்டி பொலிஸ் நிலையத்தில் நேற்று வியாழக்கிழமை முறைப்பாடு அளிக்கப்பட்டது.

இது தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, சிறுவர்கள் இருவரும் புதன்கிழமை அன்று மகாவலி கங்கைக்குச் செல்வதைக் கண்டதாகப் பிரதேச மக்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், காணாமல்போன சிறு வர்களில் ஒருவர் மகாவலி கங்கையில் மிதந்த நிலையில் இன்று காலை சடலமாக மீட்கப்பட்ட நிலையில் மற்றைய சிறுவனின் சடலமும் இன்று பிற்பகல் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுவர்கள் இருவரும் மகாவலி கங்கையில் விளையாடிக்கொண்டிருக்கும் போது அங்கிருந்த மீனவர் ஒருவர் கங்கையின் நீர் மட்டம் அதிகமாக உள்ளதால் கங்கையில் நீராட வேண்டாம் என எச்சரித்தும், சிறுவர்கள் இருவரும் நீச்சல் தெரியும் எனக் கூறி கங்கையில் தொடர்ந்து நீராடிக்கொண்டிருந்தனர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கண்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அரசியல் அறுவை சிகிச்சை

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அமைச்சரவையில் இன்று முதல் முறையாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இன்று காலை ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி முன்னிலையில் பல புதிய அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் பதவியேற்றனர்.

புதிதாகப் பத்துப் பிரதி அமைச்சர்கள் நியமிக்கப்பட்டாலும் முக்கியமான ஓர் அமைச்சு இரண்டாகப் பிளக்கப்பட்டு, இரண்டு பேரிடம் அந்த அமைச்சுகள் ஒப்படைக்கப்பட்டமைதான் இந்த அமைச்சரவை மாற்றத்தில் பிரதான விவகாரம்.

இதுவரைகாலமும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர மேம்பாடு, துறைமுகங்கள், சிவில் விமானப் போக்குவரத்து ஆகிய அமைச்சுகள் அரசுத் தரப்பின் பிரதம கொறடாவும் ஆளும் கட்சிக்குள் மிக முக்கிய பிரமுகராகவும் விளங்கும் பிமல் ரத்நாயக்காவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

அது, இப்போது இரண்டாகப் பிளக்கப்பட்டு, பிமல் ரத்நாயக்காவிடமிருந்து துறைமுகங்கள், சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு பிடுங்கப்பட்டு, அநுரா கருணதிலக விடம் அது ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது.

இப்பத்தியிலும், இந்தப் பத்திரிகையின் பிற பத்திகளிலும் துறைமுகங்கள், சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சைக்கையில்வைத்துக்கொண்டு அமைச்சர் பிமல் ரத்நாயக்கா பௌத்த - சிங்களப் பேரினவாதப் போக்கில், தேசிய நலனுக்குக் குந்தகமாக, எகத்தளமாக நடந்து கொள்கின்றார் என்று பல தடவைகள் மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டி வந்தோம்.

காங்கேசன்துறை துறைமுகத்தினதும் பலாலி விமான நிலையத்தினதும் அபிவிருத்திக்கு இந்தியா நன்கொடையாக - உதவி வழங்க முன் வந்தும், அதை வெளிப்படையாக எதிர்த்து, உதாசீனப்படுத்தி, தூக்கி எறிந்து, பகிரங்கமாகக் கருத்து வெளியிட்டு, அடாவடித்தனமாக அவர் நடந்து கொண்டு வந்தார்.

அந்நிய செலாவணி ஈட்டலுக்காக நாடு சுற்றுலாப் பயணிகளின் வருகைக்கு வெற்றிலை வைத்துக் காத்து, தவம் இருக்க, சுற்றுலாப் பயணிகளின் வருகையை சமாளிக்க முடியாமல் கட்டுநாயக்கா விமான நிலையம் திணறும் பின்னணியில், சர்வதேச சுற்றுலாப் பயணிகளுக்கான புதிய வாயில்களை பலாலியிலும் காங்கேசன் துறையிலும் திறப்பதற்கான வாய்ப்பை, அது இந்திய நன்கொடையாகக் கிட்டியும், பேரினவாத சிந்தனையில் அதனை அடித்து மூடி செயற்பட்டவர் பிமல் ரத்நாயக்கா. இந்திய உதவியோடு பலாலி விமானநிலையமும் காங்கேசன் துறை துறைமுகமும் மேம்படுத்தப்பட்டால் அது வடக்கின் அபிவிருத்தியில் ஒரு பெரும் மைல் கல்லாக அமைந்து விடும் என்ற ஒரே குரோத எண்ணம் காரணமாக அந்தத் திட்டங்களுக்கு நேரடியாகத் தடை விதித்துச் செயல்பட்டவர் அவர்.

இதனால் இந்தியத் தரப்பின் அதிருப்திக்கும் எரிச்சலுக்கும் ஜனாதிபதி அநுர குமாரதிஸநாயக்கவின் அரசு உள்ளாகிய பின்னணியில் இந்த நடவடிக்கை இப்போது எடுக்கப்பட்டிருக்கின்றது.

எது, எப்படியாயினும் பலாலி விமான நிலையம் மற்றும் காங்கேசன் துறை துறைமுகம் ஆகியவற்றின் மேம்பாடு ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் இதுவரையான ஒரு வருட ஆட்சியில் பின்னடைவு கண்டுவிட்டது என்ற குறை நீடிக்கத்தான் போகின்றது.

வடக்கின் அபிவிருத்தி மற்றும் அதற்கான இந்திய உதவி திட்டம் ஆகியவற்றுக்கு எதிராகக் காரியமாற்றும் தென்னிலங்கைப் பேரினவாத சக்திகளுக்கு இந்த அமைச்சரவை மாற்றம் ஒருவகையில் அதிரடி அறுவை சிகிச்சை (*Surgical Operation*) நடவடிக்கைதான்...!



# மட்டக்களப்பு படுவான் பகுதி மக்களை தொடர்ச்சியாக அச்சுறுத்தும் யானைகள்

**(மட்டக்களப்பு)**

மட்டக்களப்பு மாவட்டம் படுவாங்கரைப் பிரதேசத்துக்கு உட்பட்ட போரதீவு பற்று பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பாலையடிவட்டை கிராமத்துக்குள் நேற்று (09) அதிகாலை 03 மணியளவில் புகுந்த காட்டு யானைகள் அங்குள்ள 03 வீடுகளையும் தென்னை, வாழை, உள்ளிட்ட பயிரினங்களையும், தும்சம் செய்துவிட்டுச் சென்றுள்ளன என்று அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மக்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த வேளையில் இவ்வாறு காட்டு யானைகள் திடீரென கிராமத்துக்குள் புகுந்ததால் அங்குள்ள மக்கள் மயிரிழையில் உயிர் தப்பினர் எனவும் கவலை தெரிவிக்கின்றனர்.

காலத்துக்குக் காலம் மாற்றம் பெறும் அரசுகள் காட்டு யானைப் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுத் தருவதாக தெரிவித்து வந்திருந்த போதிலும் அதற்கு முற்றுப் புள்ளி வைக்காத இந்த நிலையில் தந்போது நாட்டைப் பொறுப்பேற்றுள்ள புதிய அரசாவது இதற்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் எனவும் அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.





# கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு 3கோடி ரூபா பெறுமதியான உபகரணம்





**(வி.ரி.சகாதேவராஜா)**

இலங்கை சுகாதார திணைக்கள நிதி ஒதுக்கீட்டில் 3 கோடி ரூபா பெறுமதியான 2 ஆம் கட்ட மருத்துவ உபகரணங்கள் கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. கல்முனை ஆதார வைத்தியசாலை யின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சுகுணன் குணசிங்கம் மேற்கொண்ட பெரும் முயற்சி காரணமாக நேற்று (09) இந்த உபகரணங்கள் வைத்திய சாலைக் குக் கொண்டுவரப்பட்டன.

அண்மையில் பணிப்பாளர் மருத்துவர் குணசிங்கம் சுகுணன் வைத்தியசாலை யின் விடுதி, பிரிவுகளின் பொறுப்பாளர்களுடன் கலந்துரையாடித் தேவைகளை இனங்கண்டு அதற்கு அமைவாக உபகரணங்களை விரைவாக பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாக கூறியிருந்தார்.

அந்த வகையில் மிக முக்கிய தேவையான சில உபகரணங்கள் ஏற்கனவே பெற்று கையளிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று (09) இவை வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கிழக்கில் சிறந்த முதியோர் சங்கமாக காரைதீவு கண்ணகி சங்கம் தெரிவு!

## ஆளுநர் விருது வழங்கிக் கௌரவித்தார்

(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாண சமூக சேவைத் திணைக்களம் நடத்திய கிழக்கு மாகாண சர்வதேச முதியோர் தின விழாவில் கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் சிறந்த முதியோர் சங்கமாகக் காரைதீவு கண்ணகி முதியோர் சங்கம் தெரிவு செய்யப்பட்டு விருது வழங்கி பாராட்டிக் கௌரவிக்கப்பட்டது.

கிழக்கு மாகாண சமூக சேவைத் திணைக்கள பணிப்பாளர் கிருஷ்ண பிள்ளை இளங்குமுதன் தலைமையில் முதியோர் தின கௌரவிப்பு விழா நேற்று (09) வியாழக்கிழமை மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்ட சிறந்த முதியோர் சங்கங்கள் முதியோர் தலைவர்கள் தெரிவு செய்யப்பட்டுப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்ன சேகர, காரைதீவு கண்ணகி முதியோர் சங்கத் தலைவர் த.சிவானந்தராஜா, பொருளாளர் த. வசந்தாதமலர் ஆகியோரிடம் அதற்கான விருதை வழங்கி கௌரவித்தார்.

நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார சமூக சேவை அமைச்சின் செயலாளர் ஜி.திசாநாயக்க, மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் எஸ்.அருள்ராஜா, மாநகர மேயர் சிவம் பாக்கியநாதன், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் மருத்துவர் இரா.முரளீஸ்வரன் உள்ளிட்டோர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

சிறந்த முதியோர் சங்கமாகத் தெரிவான காரைதீவு கண்ணகி முதியோர் சங்கத் தலைவராக த.சிவானந்தராஜா, செயலாளராக இ.நடேசபிள்ளை, பொருளாளராக த. வசந்தமலர் மற்றும் ஆறு பேர் கொண்ட நிர்வாக சபை இயங்கி வருகிறது.






# மவுஸ்சாக்கலை நீர்த் தேக்கத்தில் இன்று சடலம் ஒன்று மீட்கப்பட்டது

(மஸ்கெலியா)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள மஸ்கெலியா மவுஸ்சாக்கலை நீர் தேக்கத்தில் இருந்து 32 வயதுடைய பி.வை. எம்.சி.லக்ஸ்மன் என்பவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு மீட்கப்பட்ட நபர் திருமணமான ஒரு குழந்தையின் தந்தை எனவும் மஸ்கெலியா நோட்டன் வீதி புரவுன்லோ வட்டாரத்தில் வசிப்பவர் எனவும் மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார்.

சடலம் ஹட்டன் நீதி மன்ற நீதிவான் மற்றும் திடீர் மரண விசாரணை அதிகாரி வந்து பார்வையிட்ட பின்னர் சடலம் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு சட்ட வைத்திய அதிகாரி முன் நிலையில் உடற் கூற்று பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.






# சர்வதேச மன நல தினத்தை முன்னிட்டு செட்டிபாளையம் ஆஸ்பத்திரியில் நடைபவனி

(மட்டக்களப்பு)

சர்வதேச மன நல தினத்தை முன்னிட்டு செட்டிபாளையம் பிரதேச வைத்தியசாலையின் ஏற்பாட்டில் நடைபவனி ஒன்று இடம்பெற்றுள்ளது.

சர்வதேச மன நல தினத்தை முன்னிட்டு செட்டிபாளையம் பிரதேச வைத்தியசாலையின் ஏற்பாட்டில் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்த நடைபவனி இன்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

செட்டிபாளையம் பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி வைத்திய வைத்தியர் சி.ஜீவிதா தலைமையில் நடைபெற்ற இந்த நடைபவனியில் பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள், வைத்தியசாலை நிர்வாகத்தினர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.




# அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் மாணவர் கௌரவிப்புத் திட்டம் ஆரம்பம்!

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் கல்விப் பிரிவின் ஏற்பாட்டில், நாடளாவிய ரீதியில் உயர் தரப் பரீட்சையில் 3ஏ சித்திகளைப் பெற்ற மாணவர்களையும், சாதாரண தரப் பரீட்சையில் 9ஏ சித்திகளைப் பெற்ற மாணவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்த தேசிய அளவிலான கௌரவிப்பு நிகழ்வுகளுக்கு, அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசியத் தலைவரும் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினருமான றிஷாத் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு மாணவர்களைக் கௌரவிக்கவுள்ளார்.

கல்வித் துறையில் சிறந்து விளங்கும் மாணவர்களை ஊக்குவித்து அவர்களின் எதிர்கால கல்விப் பயணத்தை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்படுகிறது என்று கட்சியின் கல்விப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வகையில், இன்று (10) வெள்ளிக்கிழமை அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை கல்வி வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு சம்மாந்துறை பொது மண்டபத்தில் இடம்பெற்றது.

நாளை சனிக்கிழமை (11) மாலை 4 மணிக்கு கல்முனை வலயத்தில் தெரிவான மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு சாய்ந்தமருது வெலிவோரியன் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை புத்தளம் மாவட்டத்தில் தெரிவான மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் எதிர்வரும் 16 ஆம் திகதி வியாழக்கிழமை திருகோணமலை மாவட்டத்தில் தெரிவான மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 17 ஆம் திகதி, மன்னார் மாவட்டத்தில் தெரிவான மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 9 மணிக்கு முல்லைத்தீவு மாவட்டத்தில் தெரிவான மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளன. அன்று மாலை 4 மணிக்கு வவுனியா மாவட்டத்தில் இடம்பெறவுள்ளது. எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 9 மணிக்கு குருணாகல் மாவட்டத்தில் தெரிவான மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுகளுக்கு, கட்சியின் அரசியல் அதிகார பீட உறுப்பினர்கள், உயர்பீட உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கல்வியாளர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பெருமளவானோர் பங்கேற்கவுள்ளனர்.

# ‘நாட்டை உலுக்கிய 1983 கறுப்பு ஜுலையின் ஏழு நாட்கள்’

## உண்மைகளைத் துகிலுரியும் நந்தன வீரரட்னவின் நூல்

‘நாட்டை உலுக்கிய 83 கறுப்பு ஜுலையின் ஏழு நாள்கள்’ - மனோரஞ்சனின் தமிழ் மொழி பெயர்ப்பில் நந்தன வீரரட்னவின் புலனாய்வு நூல் பற்றிய வெளியீடும் உரையாடலும் நாளை 11ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் தந்தை செல்வா அரங்கில் இடம்பெறுகின்றது.

ஸ்ரீதரன் திருநாவுக்கரசு (சுகு)தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கீதிகா தர்மசிங்க, அன்ரனி கிறிஸ்டி ஜோர்ஜ், நந்தன வீரரட்ன ஆகியோர் உரையாற்றுவார். கபில கிருஷாந்த், கல்யாணந்த பெரேரா, பிரபாத் ரோட்ரிகோ, நெவில் வீரசிங்க ஆகியோர் குறும் கருத்துரை ஆற்றுவர்.

ஜனநாயக உரிமைகளுக்கான மக்கள் ஒன்றி யம் (ஜன பலய) ஏற்பாடு செய்துள்ள அந்த நிகழ்வை யொட்டிய கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.




இலங்கையின் சமூகங்களை மிக ஆழமாக பிளவுபடுத்திய 1983 அதன் முன்னரும் பின்னருமான இனவாத பயங்கரவாதத்தின் தாக்கங்கள் அனர்த் தங்களிலிருந்து இந்த நாடு இன்னும் விடுபடவில்லை. இந்த நாட்டின் சமூகப் பரம்பலை - உறவுகளை - அடியோடு புரட்டிப்போட்ட நிகழ்வு 1977 - 81 இனவாத பயங்கரவாதங்களின் தொடர்ச்சியாக உச்சம் பெற்ற நிகழ்வு 1983 கலவரம்.

இந்த நாட்டில் சிங்கள - தமிழ் பேசும் சமூகங்களிடையே நல்லிணக்கத்தையும் சமாதானத்தையும் ஐக்கியத்தையும் சகோதரத்துவத்தையும் இழி நிலைக் குக் கொண்டு வந்த நிகழ்வு. சமூக - பொருளாதார வாழ்வை, எழுச்சியை, 30 ஆண்டுகளுக்கு மேலாக முடக்கிப் போடுவதற்கும் பேரழிவுக்கும் உள்ளாக்குவதற்குமான அபகீர்த்தியான ஆரம்பம் அதுதான்.

இந்நூல் இந்த 1983 இனவாதப் பயங்கரவாதத்தின் பின்னணியிலான கொடூரமான - அவமானகரமான - சதிகளை அம்பலப்படுத்தி நிற்கிறது. அதன் நீள அகலங்களை விலா வாரியாக வெளிக்கொணர்ந்திருக்கிறது.

இனவாதத் தீயை சட சடத்து எரிய விட்டு, இழி வான முறையில் இலங்கையின் அன்றைய ஐக்கிய தேசியக் கட்சி அரசு எவ்வாறு நடந்து கொண்டது என்பதை இந் நூல் அம்பலப்படுத்துகிறது.

வரலாற்றின் கறை படிந்த இந்த அத்தியாயத்தின் ஊடாக இலங்கை அரசு இயந்திரம் ஒரு சிதை வியக்கமாக மாற்றப்பட்ட பெருங்கதையை இந்நூல் பிரதிபலிக்கிறது. 1977 தொடக்கம் 1983 வரையிலான சர்வநாச வேலைகளை இந்நூல் அம்பலப்படுத்தி இருக்கிறது

பயங்கரவாதத் தடைச் சட்டம், நாடாளுமன்றத் தேர்தல் ஒத்திவைப்பு, நாட்டை இராணுவ மயமாக்கல், காணமல் ஆக்கல், சித்திரவதைகள், படுகொலைகள், தொழிற்சங்க ஜனநாயக இயக்கங்களை அடக்குதல், குடியுரிமை பறித்தல், ஐ.தே.க. தொழிற்சங்கத்தைக் குண்டர் படையாக மாற்றுதல் என வெகுஜனவிரோத நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இனவாதப் பயங்கரவாதம் அரசு மட்டத்திலிருந்து சமூக மட்டத்திற்கு விஷ பிரசாரங்கள், புத்தகங்கள், இதர வழிகளில் கொண்டு செல்லப்பட்டன. சட்ட நீதி நெறி முறைகளுக்கு அப்பாற்பட்ட குண்டர் குழுக்கள் உருவாக்கப்பட்டன .

விசேட அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையைத் துஷ்பிரயோகம் செய்து, இத்தகையவர்கள் சமூகத்தின் மத்தியில் உலாவ விடப்பட்டார்கள். கொடூர சிறைப் படுகொலைகளை நிகழ்த்தியவர்கள் இயல்பாகச் சாதாரணமாக சமூகத்தில்வாழஅனுமதிக்கப்பட்டார்கள்.

ஆள அரசும் பாதாள உலகமும் என நாடு அராஜ கமாக மாற்றப்பட்டது. இன்று சிதிலமாக்கப்பட்ட இந்த நாடு மனித உறவுகள் சீர் செய்யப்பட வேண்டிய தருணம். எமது சகோதரத்துவ பெருமைமிகு வரலாற்று வேர்களுக்குச் செல்ல வேண்டிய தருணம்.

இந்த நாட்டின் சமூக சகோதரத்துவ நெடி, நீண்ட வரலாற்றிலிருந்து மனித கண்ணியத்தின் நெறி முறைகளை அடிப்படையாகக் கொண்டு, சமூக உறவுகள் உறுதியாக மீள் கட்டி எழுப்பப்பட வேண்டும்.

அந்த நல்ல நோக்கத்தை இந்நூலின் ஊடாக நந்தன வீரரட்ன வெளிக்கொணர்கிறார்

சிங்கள மொழியில் எழுதப்பட்ட இந்நூல் மனோ ரஞ்சன் அவர்களால் தமிழில் மொழிபெயர்க் கப் பட்டுள்ளது.

# ஒரு மனிதனின் வாழ்வில் அடிப்படைத் தூண் மனநலம்...!

## உலக உள நல தினம் - ஒக்ரோபர் 10

உடல் நலத்துக்கு இணையாக மனநலமும் ஒரு மனிதனின் வாழ்வில் அடிப்படைத் தூணாகக் கருதப்படுகிறது. மனம் சோர்வடைந்தால் உடல்நலம் பாதிக்கப்படுகிறது. உடல் சோர்வடைந்தால் மனநலம் குறைகிறது. இவ்விரண்டும் ஒருவருக்கொன்று சார்ந்தவை என்பதைக் கருத்தில் கொண்டு, உலக சுகாதார நிறுவனம் "உடல் நலம் முழுமையாக இருக்க வேண்டுமானால், மனநலமும் சிறப்பாக இருக்க வேண்டும்" என்று வலியுறுத்துகிறது. உலகம் முழுவதும் பெரும்பாலானோர் இன்று மன அழுத்தம், பதற்றம், தனிமை, மனச்சோர்வு போன்ற பிரச்சினைகளுக்குள் சிக்கிக் கொண்டுள்ளனர். இந்த நிலையைக் கருத்தில் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் ஒக்ரோபர் 10 ஆம் திகதி உலக உள நல தினம் அனுசரிக்கப்படுகிறது.

உலக உள நல தினம் முதன்முதலில் 1992 ஆம் ஆண்டு உலக உள நல கூட்டமைப்பு (World Federation for Mental Health – WFMH) மூலம் தொடங்கப்பட்டது. ஆரம்பத்தில் வெறும் விழிப்புணர்வு நாளாக இருந்தாலும், பின்னர் உலக சுகாதார நிறுவனம் (WHO), பல அரசுகள் மற்றும் தன்னார்வ அமைப்புகள் இணைந்து இதனை பெரும் பிரசார இயக்கமாக மாற்றின. இந்த நாளின் முக்கிய நோக்கங்கள் மனநலக் குறைபாடுகள் பற்றிய தவறான நம்பிக்கைகளை நீக்குதல், சிகிச்சை பெறுவதில் உள்ள சமூக அழுத்தத்தைக் குறைத்தல், அனைவருக்கும் எளிய சேவைகளை வழங்குதல், மேலும் அரசுகள் மனநலத்துக்கு உரிய கொள்கைகளை வகுத்துச் செயல்படுத்தச் செய்வது என்பனவாகும்.

2025 ஆம் ஆண்டுக்கான உலக உள நல தினத்தின் கருதுகோள் "Access to Services - Mental u;ealth in Catastrophes and Emergencies" ஆகும். இதன் பொருள், பேரிடர்கள் மற்றும் அவசர நிலைகளில் மக்கள் எளிதாக மனநலச் சேவைகளைப் பெறக்கூடிய நிலை ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதே. இன்றைய உலகில் இயற்கை சீற்றங்கள், ஆயுத மோதல்கள், அரசியல் அசாதாரண நிலைகள், விபத்துக்கள் போன்ற அவசர நிலைகள் அதிகரித்து வருகின்றன. இந்த நிலைகளில் மக்களின் உடல்நலம் மட்டுமல்ல, மனநலமும் கடுமையாகப் பாதிக்கப்படுகிறது.

இயற்கை பேரிடர்களான வெள்ளம், சூறாவளி, நிலநடுக்கம் போன்றவற்றில் மக்கள் தங்கள் வீடு, குடும்பம், வாழ்வாதாரத்தை இழக்கின்றனர். போர் மற்றும் வன்முறை சூழலில் மக்கள் இடம்பெயர்ந்து அகதிகளாக மாறுவர். இதில் குழந்தைகள், பெண்கள் மிக அதிகமாகப் பாதிக்கப்படுவர். பொது சுகாதார அவசர நிலைகளில், குறிப்பாக COVID-19 போன்ற தீவிர நிலைமையின் போது, தனிமை, வேலை இழப்பு, எதிர்காலம் பற்றிய பயம் ஆகியவை மக்களின் மனநலத்தை பெரிதும் பாதிக்கின்றன. இத்தகைய சூழலில் பலர் மனச்சோர்வு, கவலை, பிந்தைய மன உளைச்சல் (PTSD) போன்ற பிரச்சினைகளை எதிர் கொள்கின்றனர். ஆனால் அத்தகைய சேவைகள் பெரும்பாலும் அவர்களுக்குக் கிடைக்காமல் போகின்றன.

அதனால், மனநல சேவைகள் எளிதில் கிடைப்பது மிக அவசியமானது. பேரிடர் முகாம்களில் உளவியல் ஆதரவு மையங்கள் அமைத்தல், தொலைபேசி மற்றும் ஆன்லைன் ஆலோசனைகள் வழங்குதல், சமூகப் பணியாளர்கள் மற்றும் மருத்தவர்கள் மனநல பயிற்சி பெறுதல், மேலும் அரசு – தன்னார்வ அமைப்புகள் – சர்வதேச நிறுவனங்கள் இணைந்து சேவைகளை வழங்குதல் போன்றவை இதற்கான வழிமுறைகளாகும். இதன்மூலம் மக்கள் உடனடியாக உதவி பெறலாம் தற்கொலை விகிதம் குறையும் சமூக பிணைப்புகள் மீண்டும் வலுப்படும்.

உலக சுகாதார நிறுவனத்தின் 2025 புள்ளிவிவரங் களின்படி, உலகில் ஒவ்வொரு எட்டு பேரில் ஒருவர் ஒரு வகையான மனநலக் குறைபாட்டால் பாதிக்கப் படுகிறார். ஆனால், அவர்களில் பாதிக்கும் மேற்பட் டோருக்கு தேவையான சிகிச்சை கிடைப்பதில்லை. பேரிடர் சூழலில் இந்த நிலை இன்னும் மோசமடைகிறது. எனவே, மனநலம் உலக அரசுகளின் முன்னுரிமைப் பட்டியலில் இடம்பெற வேண்டியது அவசியமாகிறது.

இலங்கை சூழலில் இதற்கான பொருத்தமும் அதிகம். உள்நாட்டுப் போர் அனுபவத்தால் இன்னும் சில சமூகங்கள் மன உளைச்சலுடன் வாழ்கின்றன. வெள் ளம், சூறாவளி போன்ற இயற்கை சீற்றங்கள் வருடந் தோறும் மக்களின் வாழ்வை பாதிக்கின்றன. மேலும் இளைஞர்களிடையே மனச்சோர்வு மற்றும் தற்கொலை முயற்சிகள் அதிகரித்துள்ளன. இந்த நிலையில், 2025 கருதுகோள் இலங்கைக்கு மிகவும் பொருத்தமானதாகும். மனநலச் சேவைகள் அனைத்து பகுதிகளிலும், குறிப்பாக கிராமப்புறங்களிலும், பேரிடர் பாதிப்பு பகுதிகளிலும் எளிதாகக் கிடைக்க வேண்டும் என்பதே மிகப்பெரிய அவசியமாகிறது.

மனநலத்தை மேம்படுத்த சமூகத்தின் பங்களிப்பு தவிர்க்க முடியாதது. பள்ளிகளில் மாணவர்களுக்கு மனநலக் கல்வி வழங்கப்பட வேண்டும். ஊடகங்கள் தவறான நம்பிக்கைகளை உடைத்து விழிப்புணர்வு பரப்ப வேண்டும். குடும்பம் மற்றும் நண்பர்கள் மன உளைச்சலில் இருக்கும் நபர்களுக்கு ஆதரவாக இருக்க வேண்டும். அரசு இலவச ஆலோசனைச் சேவைகள், 24 மணி நேர மனநல ர்ழவடடைநெ போன்றவற்றை ஏற்படுத்த வேண்டும்.

உலக உள நல தினத்தை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகள் உலகம் முழுவதும் நடைபெறுகின்றன. விழிப்புணர்வு நடை பயணங்கள், கருத்தரங்குகள், ஒன்லைன் பிரச்சாரங்கள், இலவச ஆலோசனை முகாம்கள், தன்னார்வ குழுக்களின் பணி, இளைஞர்கள் கவிதை, ஓவியம், நாடகம் போன்ற வழிகளில் பங்கேற்பது ஆகியவை முக்கியமானவையாகும். இந்த நிகழ்வுகள் மக்கள் மனநலத்தின் அவசியத்தை உணரச் செய்கின்றன.

இதன் முடிவில் நாம் உணர வேண்டியது, உலக உள நல தினம் என்பது ஒரு நினைவுநாள் மட்டுமல்ல, மனித கண்ணியத்தின் விழிப்புணர்வு நாளாகும். 2025 ஆம் ஆண்டின் கருதுகோள், "Access to Services - Mental u;ealth in Catastrophes and Emergencies" எந்த சூழலிலும் மக்களின் மனநலம் புறக்கணிக்கப்படக் கூடாது என்பதை வலியுறுத்துகிறது.

உடல் நலம் போலவே மனநலமும் பாதுகாக்கப்படும் போது மட்டுமே மனித வாழ்க்கை முழுமையானதாக மாறும். அரசுகள், சமூகங்கள், குடும்பங்கள், மற்றும் ஒவ்வொரு தனிநபரும் ஒன்றிணைந்து செயற்படும் போதே மனநலச் சேவைகள் அனைவருக்கும் எட்டக் கூடியதாக மாறும். உண்மையில், மனநலம் இல்லாமல் முழுமையான நலம் இல்லை.

**சிவகுமார் ஜதுஷிகா,**
2 ஆம் வருட உளவியல்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.



# அனலை தீவு, நயினா தீவு ஆகியவற்றுக்கு அடுத்தடுத்த ஆண்டுகளில் மருத்துவப் படகு

## ஆளுநருடனான சந்திப்பில் உலக வங்கியின் பிரதிநிதிகள் தெரிவிப்பு

ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அனலை தீவுக்கான மருத்துவப் படகை 2026 ஆம் ஆண்டும், நயினாதீவுக்கான மருத்துவப் படகை 2027ஆம் ஆண்டும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக வங்கியின் பிரதிநிதிகள், மத்திய சுகாதார அமைச்சின் கீழ் செயற்படும் ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் பிரதிநிதிகள், யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோர் ஆளுநரை நேற்று வியாழக்கிழமை மதியம் (09) ஆளுநர் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர். உலக வங்கியின் நிதி உதவியுடன் ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவைகள் மேம்பாட்டுத் திட்டம் 2024 - 2028 ஆம் ஆண்டு வரையில் இலங்கையின் 9 மாகாணங்களிலும் செயற்படுத்தப்படவுள்ளது.

இதற்கு அமைவாக வடக்கு மாகாணத்துக்கு 2026 ஆம் ஆண்டு 500 மில்லியன் ரூபாவும், 2027 மற்றும் 2028 ஆம் ஆண்டுகளுக்குத் தலா 750 மில்லியன் ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதி ஒதுக்கீட்டின் கீழ் வடக்கு மாகாணத்திலுள்ள ஆரம்ப சுகாதார மருத்துவ நிலையங்கள் மேம்படுத்தப்படவுள்ளன. ஆரம்ப சுகாதார மருத்துவ நிலையங்கள் உருவாக்கப்படும்போது காணப்பட்ட தேவைப்பாடுகளுக்கும் தற்போதைய தேவைப்பாடுகளுக்கும் உள்ள மாறுபடுகளை கருத்தில்கொண்டு அவற்றைத் தற்காலத்துக்கு ஏற்றவாறு மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதற்கான வடக்கு மாகாண சபையின் ஒத்துழைப்பை உலக வங்கிப் பிரதிநிதிகளும், திட்டத்தின் பிரதிநிதிகளும் கோரினர். அத்துடன் இந்தத் திட்டம் தொடர்பில் வடக்கு மாகாணத்துக்கே முதலாவதாக பயணம் மேற்கொண்டுள்ளதாகவும் ஆளுநருக்கு தெரியப்படுத்தினர்.

இந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்குத் தேவையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று ஆளுநர் இந்தச் சந்திப்பில் உறுதியளித்தார்.







# புத்தளம் ஸாஹிரா தேசிய பாடசாலை மாணவர் சீனடிக் கலை போட்டியில் தேசிய மட்டத்துக்கு!

(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)



புத்தளம் ஸாஹிரா தேசிய பாடசாலையின் உயர்தர மாணவர்கள் சீனடிக் கலை போட்டியில் மாகாணம் மட்டத்தில் முதலாம் இடத்தை பிடித்து தேசிய மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டு பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர் என்று அதிபர் ஐ.ஏ நஜீப் தெரிவித்துள்ளார்.

சீனடிக் கலையின் மாகாண மட்ட போட்டிகள் நேற்று வியாழக்கிழமை (09) கெகுணுகொல்ல தேசிய கல்லூரியில் இடம்பெற்றன.

சீனடிக் கலையில் ஸாஹிரா தேசிய பாடசாலை சார்பில் உயர்தர மாணவர் குழுவினரகளான ஜே.சாஜித் (தலைவர்), எம்.ஏ.எம் ஆதில், எம்.கே கைஸ், எம்.எச் ஹயிதம் காசிம், எம். ஏ. எம். அஸ்மத், எஸ்.எம். அர்ஷத், எம். எம். எம். முன்தீர், எம். ஆர். எம். றஹீக் ஆகிய மாணவர்களையும் பயிற்றுவித்து வெற்றிப் பாதைக்கு வழிகாட்டிய ஆசிரியர் எம். ஏ. எம். சுபியான் ஆகியோருக்கும் பாடசாலை நிர்வாகம் சார்பாக தனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் அதிபர் ஐ.ஏ நஜீப் மேலும் தெரிவித்துள்ளார்.




# பாடசாலை மாணவர்கள் தலைக்கவசம் அணிவது சம்பந்தமாக அறிவுறுத்தல்!

**(பாறுக் ஷிஹான்)**

கல்முனை தலைமையகப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்முனை வலயக் கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள் தங்களது பாதுகாப்பு கருதி கட்டாயமாகத் தலைக்கவசம் அணிந்து செல்ல வேண்டும் என்று கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த களுவாராய்ச்சி அறிவித்துள்ளார்.

கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளருக்கு இவ்விடயம் தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.



பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் தங்களது பாதுகாப்புக் கருதியும் மற்றும் வீதி போக்குவரத்து சட்டங்களை அறிவுறுத்தல் செய்யுமாறும் வேண்டிக் கொள்வதோடு இந்தச் சட்ட திட்டங்களை மீறும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் வலயக் கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட பாடசாலை களில் பாடசாலை ஆரம்பத்திலும் முடிவிலும் ஒரு ஒழுங்குபடுத்தல் செய்து வீதி போக்குவரத்து காப்பாளர்களை நியமிக்குமாறும் மாணவர்களை ஒழுங்கு படுத்துமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் வலயக் கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட பாடசாலை ஆசிரியர்கள் ஒரு சிலர் பாடசாலை வருகின்ற போது தலைக்கவசம் இன்றி மோட்டார் சைக்கிளில் செல்வது அவதானிக்கப்பட்டுள்ளதாகவும் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.








# பாஞ்சாலி புகழ் பாடும் பாண்டிருப்பு திரௌபதை அம்மன் தீப்பள்ளயம்!

கிழக்கில் தீப்பள்ளயம் என்றால் பட்டி தொட்டி எல்லாம் பறையொலி முழங்க சக்தி மயமாகும்.

அந்த தீப்பள்ளயம் கல்முனையை அடுத்துள்ள பாண்டிருப்பு எனும் பழந்தமிழ் கிராமத்தில் எழுந்தருளியுள்ள திரௌபதி அம்மன் ஆலயத்தில் வருடாந்தம் நடைபெறுவது வழக்கம்.

இவ் வருடத்திற்கான தீமிதிப்பு வைபவம் இன்று (10) வெள்ளிக்கிழமை மாலை பக்தி பூர்வமாக இடம்பெறும்.

ஆம், மகாபாரத இதிகாசத்துடன் தொடர்புடைய கிழக்கில் வரலாற்று பிரசித்தி பெற்ற பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலயத்தின் வருடாந்த தீமிதிப்பு மஹோற்சவம் கடந்த 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருக்கதவு திறத்தல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

இலங்கையில் முதன் முதலில் உருவான திரௌபதி அம்மன் கோயில் இதுவாகும். இலங்கையில் அதிகூடிய 18 முழ நீளமான தீக்குழி இங்குதான் உள்ளது. அங்கு பக்திப் பரவசத்துடன் பாஞ்சாலி பஞ்ச பாண்டவர்கள் கிருஷ்ணர் குந்தி தேவி மற்றும் அனுமதிக்கப்பட்ட விரதம் நோற்ற தேவாதிகள் மாத்திரம் தீமிதிப்பில் ஈடுபடுவார்கள்.

இந்த உற்சவம் மகாபாரதப் போரை நினைவு கூரும் முகமாக தொடர்ந்து 18 நாள்கள் நடைபெற்று வந்தது.

நாளை 11 ஆம் திகதி சனிக்கிழமை காலை பாற்பள்ளயம், தருமருக்கு முடி சூட்டுதல் தீக்குழிக்கு பால்வார்க்கும் நிகழ்வு இடம்பெற்று அன்று இரவு 7 மணிக்கு இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் திரௌபதை அம்மன் ஆலயத்தில் இருந்து ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்துக்கு அம்மன் முத்துச் சப்புறத்தில் எழுந்தருளி ஊர்வலம செல்லும் நிகழ்வுடன் உற்சவம் இனிதே நிறைவு பெறவுள்ளது.

இலங்கையிலே முதன் முதலில் திரௌபதை அம்மனுக்கென ஆலயம் அமையப்பெற்றது பக்தி மணம் கமழும் பாண்டிருப்பிலேயாகும். இந்த ஆலயத்தின் வரலாறு மிகத் தொன்மையானதாகும். வட இந்தியாவில் இருந்து வைஷ்ணவ மதத்தைப் பரப்பும் நோக்கோடும், மகாபாரத இதிகாசத்தை மக்கள் மத்தியில் நடித்துக் காண்பிக்கும் நோக்கோடும் தாதன் என்னும் மாமுனியும், அவனது ஆட்களும் கடல்வழியே பிரயாணம் செய்து மட்டக்களப்பு பகுதியை வந்தடைந்தனர். பின்னர் அங்கிருந்து அந்நாளில் நாகர் முனை என அழைக்கப்பட்ட திருக்கோயிலை சென்றடைந்து அங்கேயே தங்கியிருந்து மகாபாரத இதிகாசக் கதையினை மக்கள் மத்தியில் போதித்துவந்தனர்.

வட இந்தியாவில் இருந்துவந்த தாதன் என்பவன் இங்கு வந்திருப்பதை ஒற்றன் மூலம் அறிந்து கொண்ட அப்போது மட்டக்களப்பு பகுதிக்கு சிற்றரசனாக இருந்த மாருதசேனனுடைய புத்திரன் எதிர்மன்ன சிங்கன் (கி.பி.1539-கி.பி.1583) தாதனைக்கண்டு அவனது வருகை, குலம், நோக்கம், கோத்திரம், நாடுஎன்பவற்றை விசாரித்திருந்தான்.

தாதனும், தான் வருகை தந்த நோக்கத்தை மன்னனிடம் தெரிவித்து அதற்கேற்ற உகந்த இடம் ஒன்றை தேடி வழங்குமாறு மன்னனிடம் கேட்டுக்கொண்டான். மன்னனும் தானின் விருப்பப்படியே கடல் வழியே பிரயாணம் மேற்கொண்டபோது அருகே கடலும், ஆலவிருட்சங்களும், கொக்கட்டிமரங்களும் மேற்கே வனப்பகுதியும் காணப்பட்ட பாண்டிருப்பைக் கண்டு அங்கேயே தாம் கையோடு கொண்டுவந்திருந்த திரௌபதை, விஸ்ணு, பாண்டவர்கள் சிலைகளை வைத்து வழிபாடு நடத்தி வணங்கிவந்தான். மன்னனும் தாதனின் வழிபாட்டு முறைக்குப் பூரண ஆதரவைத் தெரிவித்தான்.

அக்காலத்தில் திரௌபதை அம்மன் ஆலயத்தின் மகிமையை கேள்வியுற்ற கண்டி மாநகரை ஆட்சிபுரிந்த அரசனான விமலதர்ம சூரியன் (கி.பி.1594 -கி.பி.1604)இல் இங்குவந்து அம்மனை தரிசித்துவிட்டு சென்றதாகவும், இவ்வாலயத்திற்காக தங்கம், வெள்ளி போன்ற ஆபரணங்களை பரிசாக அளித்துச் சென்றுள்ளான் என கல்வெட்டுக்களில் இருந்த அறியக்கிடக்கின்றது.

இந்த நிகழ்வுக்கு நாட்டின் நாலாபாகங்களில் இருந்தும் அதிகளவிலான பக்தர்கள் பாண்டிருப்புக்கு வருகை தருவது வழக்கம். இதனையிட்டு விசேட போக்குவரத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**வித்தகர் விபுலமாமணி**
வி.ரி. சகாதேவராஜா,
காரைதீவு நிருபர்.






# அறிவுக்கும் ஆரோக்கியத்துக்கும் இடையிலான பாலம் – மனநலம்!

## *உலக மனநல தினம் - ஒகஸ்ட் 10*

உலக மனநல தினம் ஒவ்வொரு ஆண்டும் ஒகஸ்ட் 10 கடைபிடிக்கப்படுகின்றது. உலக மக்களால் உலக மனநல தினம் எனக் கொண்டாடப்படுகிறது. 1992 ஆம் ஆண்டு முதல் உலக சுகாதார அமைப்பு (WHO) மற்றும் World Federation for Mental u;ealth இணைந்து இந்த நாளை அறிமுகப்படுத்தின. இந்த தினத்தின் நோக்கம், உலகம் முழுவதும் மனநலத்தின் அவசியம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி, மனநல சவால்களை எதிர்கொள்கிறவர்களுக்கு சமூக ஆதரவை வழங்கு வதாகும்.

தனி ஒருவரின் மனநலம் என்பது பொது நலனுக்கு வழிவகுக்கும் ஒரு மார்க்கம். உடல் ஆரோக்கியம் மட்டு மல்லாமல் மன ஆரோக்கியத்தினையும் சமநிலையில் வைத்திருப்பதே நாம் ஆரம்பிக்கும் ஒவ்வொரு காரியத்தையும் நேர்த்தியாகவும், நிறைவாகவும் செய்து முடிக்க உதவும்.

WHO இன் கூற்றுப்படி, உலகெங்கிலும் உள்ள ஒவ்வொரு எட்டு நபர்களில் ஒருவர் மனநலக் கோளாறுகளால் பாதிக்கப்படுகின்றனர் என்று தெரி விக்கிறது.

### மனமும் உடலும் உற்ற நண்பர்கள்

மனநல தினத்தன்று நாம் பேணிகாக்க வேண்டியது நம் மனதை தான். “மனதுக்கு உற்ற நண்பன் உடல்தான். உடலுக்கு உற்ற நண்பன் மனம்தான்” இவை இரண்டும் தான் எப்பொழுதும் ஒன்றாக இருக்கும். வாழ்க்கையில் எதையும் நம்மால் திட்டமிட்டபடி செய்ய முடியாது. வாழ்க் கைதான் நம் பயணத்தை தீர்மானிக்கும். அன்றைய கடமையை அன்றே முடித்திடுக!

இன்று உறங்கி நாளை கண் விளிக்கும் போது நேற்றைய நாள் நம்மில் இருந்து இறந்துவிட்டதாகதான் கருத வேண்டும். அடுத்த நாளுக்கு எக்காரணத்தை கொண்டும் நேற்றைய நாளை எடுத்த செல்ல கூடாது. எனவே நம் அன்றாட வேலையை அன்றே செய்து முடித்தல் என்பது நன்று. இப்படி செய்தல் மன அழுத்தம் ஏற்படுவதை தவிர்த்து மன நிம்மதிக்கு வழிவகுக்கும். அதேசமயம் இதை செய்யாமல் தவிர்க்கும் போதுதான் “அகத்தின் அழகு முகத்தில் தெரியும்” என்ற பழமொழிக்கு ஏற்றவாறு நம் மனநலன் குன்றலை நம் முகங்களும் கண்களிலுமே வெளிச்சமிட்டு காட்டிக் கொடுத்துவிடும். இன்று என்பதே உண்மை, நாளை என்பது நிச்சயம் இல்லை. நேற்று என்பது முடிந்த போன பொய், இன்று என்பதே உண்மை”. இந்த மூன்றையும் கடைபிடித்தாலே வாழ்க்கையில் அதிகபடியான பிரச்சினையைச் சரி செய்து விடலாம்.

அே சமயம் வாழ்கையின் பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில் பிரச்சினை என்பது வந்து கொண்டுதான் இருக்கும். ஆனால், அதை நினைத்து கொண்டு இருப்பது ஆள்மனதில் ஒரு வகையான பாதிப்பை ஏற்படுத்தும் வண்ணம் அமைகிறது. அப்பாதிப்பு உடலை பாதிக்கும். இதனால் உடலில் ரத்த அழுத்தம் ஏற்பட்டு சரியாக உணவு எடுத்து கொள்ளாமல் போவது போன்ற உடலின் நலனை பாதிக்கும் காரணியாகவே இது மாறி விடும். எனவே “மனநலம் உடல் நலனுக்கு வழிவகுக்கும் என்பதை மறக்க வேண்டாம்.”

### மனநலத்தின் அவசியம்

மனநலம் என்பது நமது சிந்தனை, உணர்ச்சி, நடத்தை, உறவுகள் மற்றும் வாழ்க்கை முடிவுகள் ஆகியவற்றை நேரடியாக பாதிக்கும். மாணவர்கள் – கல்விச் சுமை, தேர்வு அழுத்தம், வேலைவாய்ப்பு அச்சம் காரணமாக பல இளைஞர்கள் மனஅழுத்தத்தில் சிக்குகின்றனர். உதாரணமாக, இலங்கை மற்றும் இந்தியாவில் பல்கலைக்கழக மாணவர்களிடையே தற்கொலை விகிதம் அதிகரித்து வருவது கவலைக்குரியது. பணியாளர்கள் – வேலை இழப்பு, அதிக நேர வேலை, குறைந்த சம்பளம் ஆகியவை பணியாளர்களின் மனநலத்தை பாதிக்கின்றன. பெண்கள் – குடும்பப் பொறுப்புகள், பாலின வேறுபாடு, வீட்டு வன்முறை போன்றவை பெண்களின் மனநலத்தில் எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. முதியவர்கள் – தனிமை, உடல் நலக்குறைவு, குடும்பப் புறக்கணிப்பு ஆகியவை

தொடர்ச்சி▼

# அறிவுக்கும் ஆரோக்கியத்துக்கும் இடையிலான பாலம் - மனநலம்!

தொடர்ச்சி▲

அவர்களை மனநலப் பிரச்சினைகளுக்கு உள்ளாக்குகின்றன.

**உலகளாவிய மற்றும் உள்ளூர் நிலைமை**

WHO வின் அறிக்கைகளின்படி, உலகில் ஒவ்வொரு 8 பேரில் ஒருவருக்கு மனநலக் குறைபாடு உள்ளது. இலங்கையில், கடந்த பத்து ஆண்டுகளில் மனஅழுத்தம் மற்றும் தற்கொலை விகிதம் அதிகரித்து வருவதாக சுகாதார ஆய்வுகள் தெரிவிக்கின்றன. குறிப்பாக கொரோனா காலத்தில், பலர் தனிமை, வேலை இழப்பு, பயம் போன்ற காரணங்களால் மனநலச் சவால்களை சந்தித்தனர். நாட்டின் மக்கள் தொகையில் சுமார் 10 வீதமானோர் பல்வேறு மனநல நிலைமைகளால் பாதிக்கப்பட்டுள்ளனர், மேலும் சுமார் 2 வீதம் பேர் கடுமையான மனநல நிலைமைகளைக் கொண்டுள்ளனர் என்று சுகாதார சேவைகள் இயக்குநர் ஜெனரல் டாக்டர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டில் சுமார் 37,000 நோயாளிகள் மனநல மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுள்ளனர். என்று கூறிய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தற்கொலைக்கு மனநல நிலைமைகள் முக்கிய காரணம் என்று கூறினார்.

**மனநலத்தை மேம்படுத்தும் வழிகள்**

நேர்மறை சிந்தனை – தினமும் நன்றி உணர்வை வளர்த்துக்கொள்ளுதல். உடற்பயிற்சி மற்றும் யோகா – உடலையும் மனதையும் சீராக வைத்திருக்கும். போதிய தூக்கம், ஒவ்வொரு நாளும் குறைந்தது 7-8 மணி நேரம். சமூக உறவுகள், குடும்பம், நண்பர்கள், சக ஊழியர்களுடன் திறந்த மனதுடன் உரையாடுதல். கலை மற்றும் பொழுதுபோக்கு, இசை, ஓவியம், வாசிப்பு போன்றவை மன அழுத்தத்தைக் குறைக்கும். நிபுணர் ஆலோசனை, மனநல நிபுணர்களிடம் உதவி பெறுவது அவசியம் அது பலவீனத்தின் அடையாளமல்ல, வலிமையின் அடையாளம்.

**சமூகத்தின் பங்கு**

மனநலத்தைப் பற்றிய பழைய தவறான நம்பிக்கைகள் இன்னும் சமூகத்தில் உள்ளது."மனநோயாளி ஆபத்தானவர்" என்ற தவறான கருதுகோள் காரணமாக, பலர் சிகிச்சை பெறத் தயங்குகின்றனர். இது அவர்களின் நிலையை மேலும் மோசமாக்குகிறது.


அரசும், சமூக அமைப்புகள், ஊடகங்கள் ஆகியவை இணைந்து, மனநலம் குறித்த விழிப்புணர்வை பரப்பி, ஒதுக்கல் மனப்பான்மையை நீக்க வேண்டும். உதாரணமாக, ஜப்பான், கனடா போன்ற நாடுகளில், பள்ளி மாணவர்களுக்கு மனநல கல்வி பாடமாக சேர்க்கப்பட்டுள்ளது. இதுபோன்ற நடைமுறைகள் நம்முடைய சமூகத்திலும் அவசியம்.

**சுய மரியாதையை இழக்காதீர்கள்**

யாராக இருந்தாலும் சரி, யாருக்காக இருந்தாலும் சரி உங்கள் சுய மரியாதையை நீங்கள் மற்றவர்களுக்காக எப்பொழுது விட்டுகொடுக்க ஆரம்பிக்கிறீர்களோ அங்கு தோன்றுகின்றது, மனநலனை கெடுப்பதற்கான தொடக்க புள்ளி. ஆரம்பத்தில் அனுசரிப்பதாக விளங்குவது, அதுவே நாளடைவில் மன கவலையை உருவாக்கும் காரணியாக மாறுகின்றது. எப்பொழுது சுயமரியாதை என்பது உங்களுக்கு இழக்கப்படுகின்றது என்ற எண்ணம் வெளியாகிறதோ,அப்பொழுது தைரியமாக அதற்கு எதிராக குரல் கொடுங்கள். "இங்கு யாரும் யாருக்கும் எதற்கும் சலித்தவர்கள் இல்லை."

**மனநலத்தில் சமூக உறவுகளின் முக்கியத்துவம்**

மனநலம் என்பது நமது எண்ணங்கள், உணர்வுகள், செயல்கள் மற்றும் சமூக ஆரோக்கியத்துடன் நேரடியாக



தொடர்புடையது. நெருக்கமான நண்பர்கள், குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உடன் பணியாளர்கள் மன அழுத்தத்தால் பாதிக்கப்படும் போது உடனடி ஆதரவை வழங்குகின்றனர். இது மனநலத்தை ஸ்திரப்படுத்துகிறது மற்றும் தனிமை உணர்வை குறைக்கிறது

மன அழுத்தம் குறைப்பு – சமூக உறவுகளில் கலந்து கொள்வது, பேசுவது மற்றும் உணர்ச்சிகளை பகிர்வது மன அழுத்தத்தை குறைக்கும் என்பது ஆய்வுகளால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சுய மதிப்பை வளர்த்தல் – பிறருடன் நல்ல உறவுகள் நம் சொந்த மதிப்பை உயர்த்துகின்றன, நம்மை நம்பிக்கையுள்ளவராக உணரச் செய்கின்றன

மன மற்றும் உடல் ஆரோக்கியம் – சமூக இணைப்புகள் தலைவலி, ஹார்மோன் மற்றும் ரத்த ஓட்ட பிரச்சினைகள், மன அழுத்தம் சிக்கல்களை தடுக்கும் வாய்ப்பினை அதிகரிக்கின்றன.

சமூக உறவுகளை பாதுகாப்பது மற்றும் வளர்ப்பது பல வழிகளில் தொடர்பு கொள்ளுதல் – நண்பர்கள், குடும்பம் மற்றும் குழுமங்களில் ஆரோக்கியமான உரையாடலில் ஈடுபடுங்கள் அர்த்தமுள்ள உரையாடல் – உணர்ச்சிகளை திறந்து பகிர்வது மற்றறிடத்தில் நம்பிக்கையை உருவாக்குகிறது.

பொதுவான செயல்களில் கலந்துகொள்ளுதல். சிறிய நிகழ்ச்சிகள், சமூக உழைப்புகள் மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகள், நம்மைத் தனிமை உணர்விலிருந்து விடுவிக்க உதவுகின்றன. தினசரி ஆரோக்கிய பழக்கங்களில் ஈடுபடுதல்.

உடற்பயிற்சி, மனதுக்கான தீவிர கவனத்தைப் பயிற்சி செய்யுதல், நன்றியுணர்வு மற்றும் விருப்பமான செயல்களில் ஈடுபடல். நண்பர்களுக்கு இணைபோல் சமூக உறவுகளையும் மேம்படுத்துதல்.

ஊக்குவிப்பு – சிறு வயதிலிருந்தே சமூக இணைப்புகள், ஊக்குவிப்பு மற்றும் விளையாட்டு வாய்ப்புகள் நமது மனநல வளங்களை உருவாக்க உதவுகின்றன. கவனிக்காத தனிமை அல்லது குறைந்த உறவுகள் பின்வரும் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும். அதிக கவலை, மன அழுத்தம், உடல்நல சிக்கல்கள் மற்றும் சமூகப் பிரிவினை மனதைப் பாதிக்கும்.



**நாகராசா தனுஸ்காந்,**
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.




# கரூர் சம்பவத்துக்கு பின் விஜய் அங்கிருந்து வெளியேறுவதற்கு உத்தரவிடப்பட்டார்

## உச்ச நீதிமன்றத்தில் த.வெ.க. வாதம்

கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்தின் போது பொது ஒழுங்கை நிலைநாட்டவே விஜய் அந்த இடத்தைவிட்டு வெளியேற உத்தரவிடப்பட்டார். பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் உதவ எங்கள் தலைவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை என உச்ச நீதிமன்றத்தில் த.வெ.க. தரப்பில் வாதிடப்பட்டது.

கரூரில் த.வெ.க. தலைவர் விஜய் செப்ரெம்பர் 27இல் பங்கேற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 2 வயது குழந்தை, பெண்கள் உட்பட 41பேர் உயிரிழந்தனர். இந்த விவகாரம் தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றத்தில் வில்லிவாக்கத்தைச் சேர்ந்த தினேஷ் என்பவர் தொடர்ந்த வழக்கை விசாரித்த நீதிபதி செந்தில்குமார், கரூர் கூட்ட நெரிசல் உயிரிழப்பு வழக்கை விசாரிக்க, வடக்கு மண்டல ஐ.ஜி.அஸ்ரா கார்க் தலைமையில், சிறப்பு புலனாய்வு குழு அமைத்து உத்தரவிட்டார்.

இந்த உத்தரவை எதிர்த்து த.வெ.க. சார்பில் உச்ச நீதிமன்றத்தில் கடந்த 8 ஆம் திகதி மனு தாக்கல் செய்யப்பட்டது. மனுவில், “இந்த வழக்கில் மாநில பொலிஸ் அதிகாரிகளின் பங்கு குறித்து த.வெ.க. சார்பில் ஏற்கனவே கேள்வி எழுப்பப்பட்ட நிலையில், பொலிஸ் அதிகாரிகளைக் கொண்டே விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழு பாரபட்சமாகச் செயல்படுகிறது.

“சம்பவ இடத்தில் இருந்து கட்சித் தலைவர் விஜய் தப்பி ஓடிவிட்டார்” என்றும், “நடந்த சம்பவத்துக்கு விஜய் வருத்தம் தெரிவிக்கவில்லை” என்றும் நீதிமன்றம் தெரிவித்த கருத்துக்கள் ஏற்கனவே விசாரணையில் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளன. த.வெ.க. பேரணியில் பிரச்சினையை உருவாக்க முன்கூட்டியே திட்டமிடப்பட்ட சதி நடந்திருக்கலாம் என்பதை நிராகரிக்க முடியாது. எனவே, இந்த விவகாரம் தொடர்பாக உச்ச நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் பாரபட்சமற்ற விசாரணைக்கு உத்ரதவிட வேண்டும்” என வேண்டுகோள் விடுக்கப்பட்டது.



இதேபோல், கரூர் சம்பவம் குறித்து சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட மறுத்த சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை உத்தரவை எதிர்த்து பா.ஜ.கவின் உமா ஆனந்தன் கடந்த 7 ஆம் திகதி தொடர்ந்த மேல்முறையீட்டு மனுவை விசாரித்த உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய், நீதிபதி கே.வினோத் சந்திரன் அடங்கிய அமர்வு, இந்த வழக்கு ஒக்டோபர் 10ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என தெரிவித்தது. அதன் அடிப்படையில், இந்த வழக்கு நீதிபதிகள் ஜே.கே. மகேஸ்வரி, என். வி. அஞ்சாரியா அமர்வு முன் இன்று விசாரணைக்கு வந்தது.

த.வெ.க சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் சுப்ரமணியம், ”உயர் நீதிமன்ற வழக்கு விசாரணையில் த.வெ.க. இணைக்கப்படவேயில்லை. எங்களுக்கு உரிய வாய்ப்பளிக்காமல், கூட்டத்தைக் கட்டுப்படுத்த தவறவிட்டதாக உயர் நீதிமன்றம் எங்கள் மீது குற்றம் சாட்டியது. த.வெ.க. தலைவர்கள் சம்பவ இடத்தில் இருந்து ஓடிவிட்டனர் என உயர் நீதிமன்றம் குற்றம் சாட்டியுள்ளது.

பொது ஒழுங்கை நிலைநாட்டவே எனது கட்சிக்காரர் (விஜய்) அந்த இடத்தைவிட்டு வெளியேற உத்தரவிடப்பட்டார். பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் உதவ எங்கள் தலைவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை.

ஒக்டோபர் 3ஆம் திகதி உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு, கூட்டத்தைக் கட்டுப்படுத்த நிலையான செயல்பாட்டு நடைமுறையை வகுக்கக் கோரும் மனுவை அடிப்படையாகக் கொண்டது.” என வாதிட்டார்.



# கரூருக்கு விஜய் அனுமதி பெற்றுத்தான் செல்ல வேண்டும் என்ற நிலை இல்லை

## அண்ணாமலை கருத்து

அனுமதி பெற்றுத்தான் கரூர் செல்ல வேண்டும் என்ற நிலை இல்லை. கரூர் பாதுகாப்பான ஊர். விஜய் தைரியமாக வரலாம் என அண்ணாமலை தெரிவித்தார்.

தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தாயார் மறைவையொட்டி, சென்னை சாலிகிராமத்தில் உள்ள அவரது வீட்டுக்குச் சென்று பா.ஜ.க. முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை நேற்று அஞ்சலி செலுத்தினார்.

அதைத்தொடர்ந்து செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில், "தமிழகத்தில் எல்லோருக்கும் எந்த இடத்துக்கு செல்லவும் உரிமை உண்டு. என்னைப் பொறுத்தவரை கரூர் சென்று பாதிக்கப்பட்ட மக்களை விஜய் சந்திக்க டி.ஜி.பி. அலுவலகத்தில் பாதுகாப்பு கேட்க வேண்டிய அவசியம் தமிழகத்தில் இல்லை. இந்தியாவில் இருக்கக்கூடிய சில பகுதிகளைப் போல, அனுமதி பெற்றுதான் கரூர் செல்ல வேண்டும் என்ற நிலை இங்கு கிடையாது.

எனவே, விஜய் தைரியமாக கரூர் செல்லலாம். விஜய்யின் பாதுகாப்பை அவர்தான் பார்த்துக்கொள்ள வேண்டும். நானும் கரூரைச் சார்ந்தவன்தான். எங்க ஊருக்கு வருவதற்கு அனுமதி எதற்கு? கரூருக்கு வருவது கடினம் என்றால், எங்க ஊரில் பூதாகரமான மக்களா இருக்கிறார்கள்? அதனால், விஜய் எங்கள் ஊருக்கு வர நினைத்தால் வரலாம். யாரை பார்க்க வேண்டுமோ வந்து பார்த்து விட்டு செல்லட்டும்.

கரூருக்கு செல்வதே ஒரு அச்சுறுத்தல் என்பது போன்ற பிம்பத்தை நாம் ஏற்படுத்த வேண்டாம். இது நமது தமிழகத்தை நாமே தாழ்த்தி கீழே இறக்குவதுபோல ஆகிவிடும். கரூருக்கு விஜய் சென்றால் அவரது உயிருக்கு ஆபத்து இருக்கிறது என மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் கூறியது குறித்து கேட்கிறீர்கள். நயினார் நாகேந்திரன் பேசியதை நான் கவனிக்கவில்லை. கரூர் பாதுகாப்பான ஊர்." என்றார்.



# ஆந்திரா பட்டாசு வெடி விபத்து: உயிரிழப்புகள் 8 ஆக அதிகரிப்பு

ஆந்திராவில் ஏற்பட்ட பட்டாசு வெடி விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 8 ஆக அதிகரித்துள்ளது.

ஆந்திராவின் கோனசீமா மாவட்டம், ராயவரம் கணபதி மைதானத்தில் தீபாவளி பண்டிகைக்காக பட்டாசுகளை பொதி செய்து அனுப்பும் பணி நடைபெறுகிறது. இங்கு புதன்கிழமை திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

இதில் 4 பெண்கள் உட்பட 6 தொழிலாளர்கள உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர். 20 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இதில் 4 பேரின் நிலைமை மோசமாக இருந்தது.

இந்நிலையில், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த 2 பேர் நேற்று உயிரிழந்தனர். ஒட்டுமொத்த உயிரிழப்பு எண்ணிக்கை 8 ஆக உயர்ந்துள்ளது.

# வெனிசுலா எதிர்க்கட்சித் தலைவருக்கு 2025இன் அமைதிக்கான நோபல் பரிசு

2025 ஆம் ஆண்டு நோபல் பரிசுக்கான அறிவிப்புகள் வெளியாகியுள்ளன.

அதன்படி இன்று 2025ஆம் ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசு வெனிசுலாவின் எதிர்க்கட்சித் தலைவர் மரியா கொரினா மச்சாடோவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

வெனிசுலா மக்களுக்கான ஜனநாயக உரிமைகளை ஊக்குவித்ததற்காகவும், சர்வாதிகாரத்தில் இருந்து ஜனநாயகத்திற்கு அமைதியான மாற்றத்தை நோக்கி அவர் மேற்கொண்ட முயற்சிகளுக்காகவும் அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



# இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் உரையாற்றவுள்ளார் ட்ரம்ப்



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், சபாநாயகர் அமீர் ஓஹானாவின் அழைப்பின் பேரில், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்ல திட்டமிட்டுள்ளார்.

இதேவேளை, இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் அவர் உரையாற்ற உள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

2008 இற்குப் பின்னர் இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஒருவர் ஆற்றும் முதல் உரை இதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது.

# பிலிப்பைன்ஸில் நில அதிர்வு: சுனாமி எச்சரிக்கை விடுப்பு

பிலிப்பைன்ஸின் மின்டானோவ் நகரில் 7.4 மெக்னிடியூட் அளவில் நில அதிர்வு ஏற்பட்டுள்ளது.

இந்த சக்திவாய்ந்த நில அதிர்வை தொடர்ந்து சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நில அதிர்வு 62 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்டதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

நில அதிர்வால் கட்டடங்கள் அதிர்ந்துள்ளதாகவும் இதனால் மக்கள் அச்சமடைந்து வீதிகளில் தஞ்சம் அடைந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.





கனடா முரசு
பக்கங்கள் - 03
வெள்ளிக்கிழமை 10/10/2025

## கனடாவில் பிறந்த அனைவரும் குடியுரிமை பெறும் தற்போதைய சட்டத்தினை கட்டுப்படுத்த வேண்டும்



C2 ▶



# காசா சமாதானத் திட்டத்திற்கு கனடா பிரதமர் பாராட்டு

காசா மோதலை நிறுத்தும் நோக்கில் அமெரிக்கா முன்னெடுத்து வரும் சமாதான திட்டத்தின் செயல்பாட்டை உறுதிசெய்ய அனைத்து தரப்பினரும் தங்கள் பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும் என கனடா பிரதமர் மார்க் கார்னி வலியுறுத்தியுள்ளார்.

ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோது கார்னி இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அடுத்த 48 மணி நேரம் மிகவும் தீர்மானகரமானவை. நாங்கள் உற்சாகத்துடன் இருக்கிறோம், ஆனால் இது முதல் கட்டமே - இன்னும் பல செய்யப்பட வேண்டியுள்ளது என தெரிவித்துள்ளார். C2 ▶

# அமெரிக்கப் பொருள்களை புறக்கணிக்கும் கனடியர்கள்



அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட பொருள்களை புறக்கணிப்பதோ, அமெரிக்காவுக்குச் சுற்றுப்பயணங்களை தவிர்ப்பதன் மூலம் கனடாவிற்கு நன்மை கிடைக்கும் என 80 வீதமான கனடியர்கள் கருதுகின்றனர்.

நானோஸ் ஆய்வு நிறுவனத்தின் கருத்துக் கணிப்பு மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

அமெரிக்கப் பொருட்களை நிராகரிப்பதன் ஊடாக அந்நாட்டுடனான வணிகப் பேச்சுவார்த்தைகளை வலுவாக முன்னெடுக்கலாம் எனவும் பேரம் பேசும் பலம் அதிகரிக்கும் எனவும் கனடியர்கள் கருதுகின்றனர்.

அமெரிக்கா கனடா பொருள்களுக்குச் சுங்க வரி விதித்ததற்கு பதிலாக இத்தகைய புறக்கணிப்பு நடவடிக்கைகள் “பயனுள்ளதாகவோ அல்லது சில அளவுக்கு பயனுள்ளதாகவோ” இருக்கும் என 80 வீதமான கனடியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, 18 வீதமானோர் மட்டும் இது பயனற்றதாக கருத்து வெளியிட்டுள்ளனர்.

55 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களில் 85 வீதமானோர், அமெரிக்க பொருள்களை புறக்கணிப்பது கனடாவின் நிலைப்பாட்டை வலுப்படுத்தும் என தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கப் பொருள்களை நிராகரிக்க வேண்டுமென கருத்துக் கணிப்பில் பங்கேற்ற அட்லாண்டிக் மாகாண கனடியர்கள் தெரிவித்துள்ளனர்.

# கனடாவில் பிறந்த அனைவரும் குடியுரிமை பெறும் தற்போதைய சட்டத்தினை கட்டுப்படுத்த வேண்டும்

## கன்சர்வேட்டிவ் கட்சி கோரிக்கை



கனடாவில் பிறந்த அனைவரும் தானாகவே கனடிய குடியுரிமை பெறும் தற்போதைய சட்டத்தை கட்டுப்படுத்த வேண்டும் என கன்சர்வேட்டிவ் கட்சி கோரியுள்ளது.

தற்போதைய சட்டப்படி, கனடாவில் பிறக்கும் யாரும், பெற்றோரின் குடியுரிமை நிலையைப் பொருட்படுத்தாமல், தானாகவே கனடிய குடியுரிமை பெறுகின்றனர்.

குடியுரிமை தானாக வழங்கப்பட வேண்டியது, பெற்றோரில் குறைந்தது ஒருவராவது கனடிய குடிமகன் அல்லது நிரந்தர குடியிருப்பாளர் ஆனபோது மட்டுமே இருக்க வேண்டும் என கன்சர்வேட்டிவ் கட்சியின் குடியேற்ற விவகார விமர்சகர் மிசேல் ரெம்பல் கார்னர் தெரிவித்துள்ளார்.

இந்த திருத்தத்தை அரசாங்க சட்ட மூலத்தில் சேர்க்க அவர் செவ்வாயன்று நாடாளுமன்ற குழுவில் முன்மொழிந்தார். ஆனால் லிபரல் மற்றும் ப்ளொக் க்யூபெக்கோயிஸ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்து, அந்த முன்மொழிவு நிராகரிக்கப்பட்டது.

"பிறப்பால் குடியுரிமை வழங்கும் தற்போதைய சட்டத்தில் மாற்றம் செய்ய தேவையில்லை என நான் நம்புகிறேன் என நீதியமைச்சர் சான் ஃப்ரேசர் இது குறித்து கருத்து வெளியிட்டுள்ளார்.

இத்தகைய மாற்றங்கள் புதிய குடியேற்றத்தார்களை குறிவைக்கும் நடவடிக்கையாக மாறக்கூடும் எனவும், கனடாவில் எதிர்க்குடியேற்ற மனப்பான்மை அதிகரித்து வருவதாகவும் கனடிய குடியுரிமை நிறுவகத்தின் தலைமை நிர்வாக அதிகாரி எச்சரித்துள்ளார்.

இந்த விவாதம், கனடாவின் குடியேற்ற மற்றும் குடியுரிமை கொள்கைகள் குறித்து அரசியல் கட்சிகளுக்கிடையேயான பெரும் கருத்து வேறுபாட்டை மீண்டும் வெளிப்படுத்தியுள்ளது.

# மது போதையில் வாகனம் செலுத்திய பொலிஸ் அதிகாரி பணி நீக்கப்பட்டார்




கனடாவில் மது போதை காரணமாக பொலிஸ் அதிகாரி ஒருவர் பணியை இழக்க நேரிட்டுள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் வில்லியம்ஸ் லேக் பிரிவில் பணியாற்றிய பொலிஸ் அதிகாரி, மது போதையில் வாகனம் செலுத்தினார் எனவும் பொது மக்களிடம் துப்பாக்கியை காட்டினார் என்றும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டதால், பதவியிலிருந்து விலகுமாறு அவருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் 2022 ஜூலை 1 ஆம் திகதி அதிகாலை நேரத்தில் நடந்ததாக விசாரணை ஆணைக்குழு கண்டறிந்துள்ளது.

ஆணைக்குழு உறுப்பினர் கெவின் எல். ஹாரிசன் 2025 ஜூலை 22 அன்று தீர்ப்பை வழங்கியிருந்தாலும், அது சமீபத்தில் பொதுவாக வெளியிடப்பட்டது.

விசாரணை ஆவணங்களின்படி, பொலிஸ் அதிகாரி தனது போர்ட் எப்.350 வாகனத்தை வீதியில் கட்டுப்பாடின்றி செலுத்தி, இரண்டு ஆண்கள் அருகே சென்றுள்ளார்.

பின்னர் அவர்களிடம் "ஏதாவது பிரச்சனை இருக்கிறதா?" எனக் கேட்டு தன் துப்பாக்கியை காண்பித்து மிரட்டியமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவரது வாகனத்தில் திறந்த மதுபான போத்தல் ஒன்றும் இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். அந்த பொலிஸ் அதிகாரி தான் 7 போத்தல் மதுபானம் குடித்ததாக ஒப்புக்கொண்டுள்ளார்.

விசாரணை ஆணைக்குழு தீர்ப்பில், "அவர் துப்பாக்கியை சில விநாடிகள் எடுத்துக்காட்டி, மீண்டும் மறைத்தார். இது பொதுமக்களை அச்சுறுத்தும் செயல்," என கூறப்பட்டுள்ளது.

அந்த போலீஸ் அதிகாரி கைது செய்யப்பட்டபோது மது சோதனையில் மது அருந்தியமை கண்டறியப்பட்டது.

இரண்டாவது சோதனையை மறுத்ததால், அவருக்கு 90 நாள்கள் வாகனம் செலுத்த தடை விதிக்கப்பட்டது, மேலும் அவரது வாகனம் 30 நாட்களுக்கு பறிமுதல் செய்யப்பட்டது.

### காசா சமாதான...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், கட்டார், எகிப்து மற்றும் துருக்கி ஆகிய நாடுகளின் முயற்சிகளை கார்னி பாராட்டியுள்ளார்.

கனடா மனிதாபிமான உதவிகளை வழங்குகிறது. இதை ஆதரிக்க பல்வேறு வழிமுறைகளைப் பயன்படுத்தலாம் என தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் ஆகிய இரு தரப்பினரும் அமெரிக்க ஆதரவில் உருவாக்கப்பட்ட அமைதி திட்டத்தின் முதல் கட்டத்தில் ஒப்பந்தத்தை எட்டியுள்ளதாக அறிவித்துள்ளன.



# பிரிட்டிஷ் கொலம்பியாவில் ஏ.டி.எம். இயந்திர கொள்ளை

கனடாவில் பிரிட்டிஷ் கொலம்பியா வின் பீச்ச்லாண்ட் பகுதியில் உள்ள ஒரு வங்கியில் அதிகாலையில் ஏ.டி.எம் இயந்திரம் திருடப்பட்டுள்ளதாக அதி காரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் க்ளிமென்ட்ஸ் கிரசன்ட் பகுதியில் நேற்று அதிகாலை சுமார் 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வெஸ்ட் கெலோனா பொலிஸார் இது தொடர்பிலான தகவல்களை வெளியிட் டுள்ளனர்.

வங்கி கட்டடத்தின் பக்கவாட்டில் இருந்த ஏ.டி.எம் வைப்பு பெட்டியை கொள்ளையர்கள் ஒரு முன்மாதிரி இயந் திரம் (கசழவெ-நனெ டழயனநச) மற் றும் ஒரு பிக்கப் லொறி பயன்படுத்தி வலுக்கட்டாயமாக இழுத்து எடுத்துச் சென்றனர் என பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

கொள்ளையர்கள் பயன்படுத்திய இரு வாகனங்களும் மற்றும் ஏ.டி.எம் வைப்பு பெட்டியும் அருகிலேயே கைவிடப் பட்ட நிலையில் பொலிஸாரால் மீட்கப் பட்டன.



ஆனால், குற்றவாளிகள் இதுவரை கைது செய்யப்படவில்லை. இது மிகவும் ஆபத்தான செயல் எனவும் வங்கிக்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குற்றச்சம்பவத்தை கண்டவர்கள் அல்லது விசாரணைக்கு உதவக் கூடிய தகவல் உள்ளவர்கள் 250-768-2880 என்ற இலக்கத்தில் தொடர்பு கொண்டு அறிவிக்குமாறு கோரப்பட் டுள்ளது.



